JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 02.09.2025.

**C.C. 95/2014** **Name: Gunasekaran** **S/o. Marannagounder P.W.** 6

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 6 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**

1. குற்ற எண். 861/2011 ல் சட்டப்பிரிவு இதச 392, 506(2) என்ற வழக்கில் எந்த தேதியில் காவல் அடைப்பில் என்னை வைக்கப்பட்டது என்றால் 19.11.2011 ம் தேதி 18.00 மணிக்கு இந்த குற்ற எண்ணிலும், மற்றொரு குற்ற எண்ணான இந்த வழக்கின் குற்ற எண்ணிலும் காவல் அடைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் அடைப்பில் 18.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். 861/2011 குற்ற எண்ணின் அடிப்படையில் தான் ஈரோடு, உடுமலை, நாமக்கல், சித்தோடு ஆகிய ஊர்களில் உள்ள காவல் நிலைய வழக்குகளிலும் என் மீது உள்ள வழக்குகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சித்தோடு, பளையபாளையம், நாமக்கல் ஆகிய காவல் நிலையங்களில் உள்ள வழக்குகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

2. குற்ற எண். 861/2011 வழக்கு 14 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது அதற்கான காரணம் குறித்து சொல்ல முடியுமா என்றால் இந்த வழக்கில் 2019 ம் ஆண்டு நான் முதல் விசாரணை கொடுத்து விட்டேன். அதன் பின்னிட்டு மனுதாக்கல் செய்யப்பட்டதின் பேரில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகினேன். பெருந்துறை குற்ற எண். 656/2011 சட்டப்பிரிவு இதச 392 ல் எந்த தேதியில் நான் கைது செய்யப்பட்டேன் என்றால் 19.11.2011 ம் தேதி 18.00 மணிக்கு கைது செய்தேன். என்னிடம் எத்தனை மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் 18.00 மணிக்கு பெறப்பட்டது. என்னை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் கைது செய்யப்பட்ட சென்னிமலை

ரோட்டில் உள்ள எல்லைமேட்டில் வைத்து விசாரித்தேன். என்னை விசாரித்த நேரம் பகலா இரவா என்றால் மாலை நேரம் ஆகும். ஒப்புதல் வாக்குமூலம் யார் தயார் செய்தார்கள் என்றால் என்னுடைய உதவியாளர் தயார் செய்தார்.

3. என்னிடம் கேள்வி கேட்க கேட்க நான் பதில் சொன்னேனா என்றால் ஆமாம். என்னுடைய ஒப்புதல் வாக்குமூலம் 16 பக்கங்களை கொண்டதா என்றால் ஆமாம். 16 பக்கங்கள் கொண்ட வாக்குமூலத்தை எத்தனை மணி நேரத்தில் தயார் செய்தேன் என்றால் அரை மணி நேரத்தில் தயார் செய்தேன். இந்த வழக்கின் தங்க செயினை யார் முன்னிலையில் கைப்பற்றினேன் என்றால் சாட்சிகள் லோகநாதன், தேவராஜ் முன்னிலையில் எதிரியிடம் இருந்து கைப்பற்றினேன். சொன்ன நேரத்தில், சொன்ன விதத்திதல் என்னிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையில் நான் கைது செய்யப்படவில்லை எனவும், நான் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. உதவி ஆய்வாளரை நான் விசாரித்தேனா என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் காலம் 1 ல் உள்ள தேதியில் மாதம் திருத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவரிடம் தான் கேட்க வேண்டும். முதல் தகவல் அறிக்கையில் 15.06.2011 ம் தேதி 15.09.2011 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலம் 3 ல் 12.09.2011 ம் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலம் 7 ல் எதிரி அடையாளம் தெரியாத நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கான காலதாமதம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதியால் தாமதம் என்று குறிப்பிட்டுள்ளோம். அ.சா.1 சம்பவம் எந்த தேதி நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் 12.09.2011 என்று குறிப்பிட்டுள்ளார்.

5. முதல் தகவல் அறிக்கை மற்றும் அ.சா.ஆ.1 புகாரில் தங்க சங்கிலியின் மாடல் , முத்திரை மற்றும் வகை குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் என்ன நிறத்தில் உள்ளேன் என்றால் மாநிறத்தில் உள்ளேன். நான் தற்போது காதில் கடுக்கன் எதுவும் அணியவில்லை என்றால் சரிதான். புகாரில் இங்கு நாங்கள் பேசும் தமிழ் மொழியை விட வித்தியசமான தமிழில் பேசினார் என்றும் வலது புற காதில் கடுக்கன் போட்டிருந்தார், கறுப்பு நிறமாகவும், சற்று தடித்த உடம்பும் சுமார் 5 ½ அடி உயரம்

கொண்டவராக இருந்தார், பைக்கில் வெளியில் உட்கார்ந்த படி இருந்தவர் சரியான அடையாளம் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

6. நான் தற்போது தூய தமிழில் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான லோகநாதன் மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் எப்போது நான் விசாரித்தேன் என்றால் 19.11.2011 ம் தேதி விசாரித்தேன். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் நீதிமன்றத்திற்கு 12.06.2012 ம் தேதி தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயாரிக்கப்படவில்லை என்றும், பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான லோகநாதன், செல்வராஜ் ஆகியோர்களின் குவிமுச பிரிவு 161 ன் கீழான வாக்குமூலமும் 12.06.2012 ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

7. கிராம நிர்வாக அலுவலர் லோகநாதன், மற்றும் தேவராஜ் வாக்குமூலத்தை எந்த தேதியில் பதிவு செய்தேன் என்றால் 19.11.2011 ம் தேதி அன்று பதிவு செய்தேன். கிராம நிர்வாக அலுவலர் லோகநாதன், மற்றும் தேவராஜ் குவிமுச பிரிவு 161 ன் கீழான வாக்குமூலமும் 12.06.2012 ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் கிராம நிர்வாக அலுவலர் லோகநாதன், மற்றும் தேவராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை பின்னிட்டு தயாரித்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

8. 18.11.2011 ம் தேதியன்று கிராம நிர்வாக அலுவலர் லோகநாதன், மற்றும் தேவராஜ் முன்னிலையில் என்னை கைது செய்யப்படவில்லை என்றும், எந்த ஒப்புதல் வாக்குமூலமும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னையும், என் தம்பியையும் 12.11.2011 ம் தேதியன்று சட்ட விரோதமாக கைது செய்து என்னையும் , என் தம்பியையும் DSP Guest house ல் வைத்து 7 நாட்கள் அடித்து சித்தரவதை செய்யப்பட்டோம் என்றால் சரியல்ல. 17.11.2011 ம் தேதி என்னுடைய தயார் என்னை சட்ட விரோதமாக கைது செய்து வைத்திருப்பது தொடர்பாக தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஈரோடு முதன்மை மாவட்ட

நீதிமன்றத்திற்கும், தமிழ்நாடு காவல் துறை தலைவர் அவர்களுக்கும் தந்தி அனுப்பப்பட்டு அது தொடர்பாக என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு தற்போது சரிவர நினைவில் இல்லை.

9. மீண்டும் நான் கோவை மத்திய சிறையில் இருந்த போது கண்காணிப்பாளர் மூலமாக சென்னை உயர்நீதிமன்றத்திற்கும், இந்த நீதிமன்றத்திற்கும் நான் மனு அனுப்பி அது தொடர்பாக என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு தற்போது சரிவர நினைவில் இல்லை. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல கைப்பற்றியுள்ளேன். வண்டியின் பதிவு எண் என்ன என்றால் வாகனத்தில் பதிவு எண் இல்லாததால் பதிவு எண் இல்லை என்று குறிப்பிட்டு கொடுத்துள்ளேன். வண்டியின் கலர் என்றால் தற்போது நினைவில் இல்லை. எந்த ஊரில் அந்த வண்டி திருடப்பட்டதாக நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. வண்டி பற்றி நான் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் புலன் விசாரணை செய்தோம். உரிமையாளரை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த வழக்கில் அ.சா.1 ன் உறவினர்களை மட்டும் சாட்சிகளாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 3 ல் எனக்கு எதிராக சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

10. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றும் , சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், சொன்ன நேரத்தில் சாட்சிகள் முன்னிலையில் நான் கைது செய்யப்படவில்லை என்றும், எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், எந்த பொருளும் என்னிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றும் சொன்ன நேரத்தில், வழக்காவணங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றும், முன் விரோதம் காரணமாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மீது போடப்பட்ட தடுப்புக் காவல் சென்னை உயர் நீதிமன்றத்தால் நான் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டுள்ளேன் என்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 3 வழக்கில் இருந்தும் நான் விடுதலை

**செய்யப்பட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை